பக்கங்கள்:-24

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | பங்குனி 02 | ஞாயிற்றுக்கிழமை | 16.03.2025 | அதிர்வு 223

## மோடியின் வருகையை உறுதிப்படுத்திய அரசு



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர் வரும் ஏப்ரல் மாதத் தின் முதல் வாரத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள் 06

## தமிழ்ப் பிரதிநிதித்துவம் பற்றி தமிழ் மக்களுக்கே அக்கறையில்லாதபோது நாங்கள் என்ன செய்வது?

### மனோ கணேசன் எம்.பி. விசனம்



வாக்களிக்கும் விடயத்தில் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே கேள்வி கேட்டுக்கொள்ள வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள முஸ்லிம் மக்கள் தங்களது பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றும் நோக்கில் வாக்களித்துள்ளனர் என்றும், அதனைக் கடந்த பொதுத் தேர்தலிலும் காணக்கூடியதாக உள்ளது என்றும் கூறினார். 06

### எந்த உள்ளூராட்சி சபையையும் தனியே ஆள முடியாது

# தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைப்போம்

### இப்படிக் கூறுகின்றது தமிழரசு



(கி.வசந்தன்)

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைக்கும்போது தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைப்போம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 06


### கனடாவின் புதிய நீதி அமைச்சர்

## ஹரி ஆனந்தசங்கரிக்கு சிறீதரன் எம்.பி வாழ்த்து



கனடாவின் புதிய நீதி அமைச்சராக பதவியேற்றிருக்கும் ஈழத்தமிழரான ஹரி ஆனந்தசங்கரிக்கு 06

## கனகராயன்குளத்தில் திருடிய யாழ்.இளைஞர் மடக்கிப் பிடிப்பு



(கி.வசந்தன்)

யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்து கனகராயன்குளம் பகுதியில் உள்ள வீடுகளில் புகுந்து திருட்டில் ஈடுபட்ட நிலையில் இளைஞர் ஒருவர் அந்தப் பகுதி மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்று கனராயன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, கனகராயன்குளம், குறிசுட்டகுளம் பகுதியில் உள்ள மூன்று வீடுகளில் யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்த இளைஞர்கள் சிலர் நேற்றுமுன்தினம் இரவு தொலைபேசி மற்றும் தங்க நகைகள் என்பவற்றைத் திருடிச் சென்றனர்.

இதன்போது, அந்தப் பகுதி இளைஞர்கள் 06




இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அடுத்த மாதம் (ஏப்ரல்) முதல் வாரத்தில் சில நாள்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் விஜித ஹேரத் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார்.


இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயத்தின் போது பல புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன எனவும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

இந்தியப் பிரதமரின் விஜயம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதுதான். எதிர்பார்க்கப்பட்டதுதான். ஏப்ரல் 4,5,6 ஆம் திகதிகளில் அவர் இலங்கைக்கு வருகிறார் எனக் கூறப்படுகிறது.

இந்துக்களுக்கு முக்கியத்துவம் பெற்ற திருக்கோணேஸ்வரத்துக்கும் பௌத்தர்களுக்கு முக்கியத்துவம் பெற்ற அநுராதபுரம் மகாபோதி வெள்ளரசுக்கும் அவர் விஜயம் செய்து தரிசிப்பார் என்று கூறப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தின் கணிசமான 06





# அநுரகுமார அரசாங்கமும் வேறுபடவில்லை: ஹக்கீம்

"மனித உரிமை பேரவையில் அரசாங்கம் கடந்த கால அரசாங்கங்கள் கொண்டிருந்த நிலைப்பாட்டில் இருந்து பாரியளவில் வேறுபட்டிருக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவலகம், உண்மையை கண்டறியும் ஆணைக்குழு அதுதொடர்பான விடயங்களை அரசாங்கம் தெளிவாக தெரிவித்திருக்க வேண்டும்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற 2025 வரவு செலவுத் திட்டத்தின் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

"கடந்த மாதம் 25 ஆம் திகதி இடம்பெற்றிருந்த 25 ஆவது மனித உரிமை பேரவையில் எமது வெளிவிவகார அமைச்சர் கலந்துகொண்டு உரையாற்றி இருந்தார். கடந்த வருடம் இடம்பெற்ற சர்ச்சைக்குரிய பல விடயங்கள் அங்கு கையாளப்பட்டிருந்தன.

எனினும் கடந்த கால அரசாங்கங்கள் கொண்டிருந்த நிலைப்பாட்டில் இருந்து அரசாங்கம் பாரியளவில் வேறுபட்டிருக்கவில்லை. மனித உரிமை தொடர்பில் பல விடயங்களை அமைச்சர் கூறி இருந்தார். அதனை நாங்கள் வரவேற்கிறோம்.

எமது நாடு பொருளாதார ஸ்திரதன்மைற்று இருக்கிறது. அதில் இருந்து மீள்வதற்கு தேவையான விடயங்களை செய்துவருகிறது என்பதை நாங்கள் அறிவோம். தமிழ் பேசும் பொலிஸார் இணைத்துக்கொள்ளல் போன்ற பல விடயங்களை தெரிவித்திருந்தீர்கள்.

ஆனால் இவை அனைத்தும் ஒரு அடையாளமாக மட்டுமே எமக்கு தெரிகிறது. அதிகாரிகளிடமிருக்கும் பணி நிலை தொடர்பான செயற்பாட்டையே நீங்களும் வெளிப்படுத்தி இருக்கிறீர்கள்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான அலுவகம், உண்மையை கண்டறியும் ஆணைக்குழு அதுதொடர்பான விடயங்களை அரசாங்கம் தெளிவாக தெரிவித்திருக்க வேண்டும்.

அதன் நடைமுறைகள் தொடர்பில் தெரிவித்திருக்க வேண்டும். பொறுப்புக்கூறும் விடயம் காலதாமதாகி இருக்கிறது. இது தொடர்பில் சர்வதேச எம்மை குற்றம் கூறி இருக்கிறது.

மனித உரிமை ஆணைக்குழு தொடர்பில் இலங்கையில் மனித உரிமை செயற்திட்டம் தொடர்பில் நேற்று ஆவணம் ஒன்று வெளிவந்திருக்கிறது.

இணையத்தளத்தில் அது இருக்கிறது. செப் டெம்பர் அமர்வுகளுக்காக தயாராகி வருவதாக அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

அக்காலப்பகுதியில் மனித உரிமை தொடர்பில் அரசாங்கம் எடுத்த முன்னேற்றம் தொடர்பில் கூறுவதாக தெரிவித்திருந்தார். அதனை நாங்கள் வரவேற்கிறோம்.

ஆனால் தற்போது மனித உரிமை ஆணைக்குழுவினால் வெளியிட்டிருக்கும் அறிக்கையை அரசாங்கம் பார்க்க வேண்டும்.

அதில் பல்வேறு தலைப்புகளில் பல விடயங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. நீதி நியாயம் தொடர்பில் உறுப்பு நாடுகளின் நிலைப்பாட்டு தொடர்பில் கேட்கப்பட்டிருக்கிறது.

எதிர்காலத்திலான பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளின் ஏற்பாடுகள் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 51 (1) பிரேரணைக்காகவும் அரசாங்கம் தெரிவித்துள்ள கருத்து தொடர்பிலும் மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் கருத்து தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் இலங்கை ஆக்கப்பூர்வமாக செயற்படுத்த வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். அதே போன்று பொறுக்கூறும் விடயத்தில் அவர்கள் முக்கியத்துவம் செலுத்த வேண்டும். அது தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்.

சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்தாதல், தேசிய ரீதியாக அல்லது பிராந்திய ரீதியாக அல்லது சர்வதேச ரீதியாக அவர்களுக்கு தண்டனையை பெற்றுக்கொடுத்தல் என்பனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

எனவே கடந்த காலத்தில் இடம்பெற்ற அனைத்து தவறுகளும் இங்கு திருத்தப்பட்டிருக்கின்றன.பல கோரிக்கைகள் இந்த ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

மனித உரிமை வன்முறைகள் வன்முறைகள், துஷ்பிரயோகங்கள் அனைத்தும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. அதனால் பின்பற்றப்படும் மரபுரிமைகள் இதற்கான டிஜிட்டல் தொழிநுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு, இந்த சாட்சியங்களும் தரவுகளும் சுருக்கமாக பயன்படுத்தப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

எனவே அரசாங்கத்தின் புலனாய்வு துறையை பயன்படுத்தி அனைத்து சிவில் அமைப்பினராலும் இதனை செய்ய முடியாது என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும். உண்மையை கண்டறிவதற்கு பல விடயங்கள் நாங்கள் வெளிக்கொண்டுவர வேண்டும்.

உண்மையை கண்டறிதல் எனும்போது முஸ்லிம்கள் பாரிய துன்பங்களுக்கு முகம்கொடுத்திருக்கின்றார்கள். முஸ்லிம்கள், தமிழர்கள் சிங்களவர்கள் என அனைவரும் துன்பப்பட்டிருக்கிறார்கள்.

அதனால் நாங்கள் இதில் இருந்து வெளியில் வரவேண்டும். மனித உரிமை ஆணைக்குழுவின் கோரிக்கைக்கமைய அனைத்தும் வெளிக்கொண்டுவரப்பட வேண்டும்." என்றார்.



# ‘பொடி சுத்தா’ கொலை தொடர்பில் பல கோணங்களில் விசாரணை

அம்பலாங்கொட, இடம்தொட்டவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ‘பொடி சுத்தா’ எனப்படும் நிஷாந்த மென்டிஸ் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் 5 பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ‘பொடி சுத்தா’ கொல்லப்பட்டார்.

துப்பாக்கிப் பிரயோகத்துக்கான காரணம் மற்றும் சந்தேகநபர்கள் தொடர்பான தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

அம்பலாங்கொட, இடம்தொட்ட திரிமாதுர பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ‘பொடி சுத்தா’ எனப்படும் நிஷாந்த மென்டிஸ் கொலை செய்யப்பட்ட சம்பவம் வெளிநாட்டிலுள்ள “சமன் கொல்லா” எனப்படும் திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் ஒருவரினால் வழிநடத்தப்பட்டுள்ளார் என பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

# இந்தியாவிலிருந்து அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கை வருகை




இந்த மாதத்தின் முதல் 13 நாள்களில் மாத்திரம் 97,322 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த வருடத்தின் கடந்த நாள்களில் ஐந்து லட்சத்து 90,300 வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தில் மாத்திரம் இந்தியாவிலிருந்து அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

மேலும் இந்தியாவிலிருந்து 14, 848 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருக்கின்றனர்.

ரஷ்யா, ஜேர்மன், பிரித்தானியா, பிரான்ஸ், சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பாதுகாப்பு குறித்து ஆராய குழு நியமனம்

அநுராதபுரம் போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினருக்கு உரிய பாதுகாப்பு மற்றும் வசதிகளை வழங்குவது தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையை வழங்குவதற்காக சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் அனில் ஜாசிங்கவினால் மூவர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் தலைவராக வடமேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம்.கே.சம்பத் இந்திக குமார செயற்படுகிறார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த அறிக்கையை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையர்களுக்கு மீண்டும் தொழில் விசா வழங்கும் இத்தாலி

## வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தகவல்



இலங்கையர்களுக்கு மறுபடியும் தொழில் விசாக்களை வழங்குவதற்கு இத்தாலிய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற வரவு செலவு திட்டம் தொடர்பான குழுநிலை விவாதத்தின் போது வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கை உள்ளிட்ட பல நாடுகளுக்கு இத்தாலி அரசாங்கம் விசா வழங்குவதை நிறுத்தியிருந்தது. இத்தாலிய விசா தடை இலங்கைக்குப் பிரச்சினையாகவே இருந்தது.

இந்நிலையில் கடந்த 4 ஆம் திகதி இத்தாலி அரசாங்கம் விசா தடையை நீக்கியதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

“இப்போது இத்தாலிய அரசாங்கம் எங்களுக்கு விசா வசதிகளை வழங்குகிறது. தொழில் விசாக்களை வழங்கும் போது ஓட்டுநர் அனுமதிப்பத்திரங்கள் தேவைப்படுகின்றன.

நாம் வழங்கும் ஓட்டுநர் அனுமதிப் பத்திரத்தில் பல தொழிநுட்ப வேறுபாடுகள் காணப்படுவதாகக் கடந்த 11ஆம் திகதி அறிவிக்கப்பட்டது.

சுமார் ஐந்து வகையான ஓட்டுநர் அனுமதிப்பத்திரங்கள் காணப்படுவதால் இத்தாலி அரசாங்கத்தால் இவற்றை அடையாளம் காணுவதில் சிக்கல்கள் ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டியுள்ளது. எனவே இந்த ஐந்தையும் ஒரே முறையில் வழங்குவது தொடர்பில் கலந்துரையாடி இணக்கம் தெரிவித்துள்ளோம்.

இது தொடர்பில் கடந்த 11 ஆம் திகதி உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது. 13ஆம் திகதி அமைச்சரவைக்கும் இது தொடர்பில் அறிவித்துள்ளோம். மேலும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்துக்கும் தகவல் தெரிவித்துள்ளோம்.“ – என்றார்.

# தொழிலுக்காக வெளிநாடு செல்வோர் 1989 என்ற இலக்கத்திற்கு அழையுங்கள்



வேலைவாய்ப்புக்காக தனியார் முகவர்களின் ஊடாக வெளிநாடு செல்லும்போது 1989 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி முகவர் தொடர்பில் அறிந்துகொள்ள முடியும் என வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

வேலைவாய்ப்புக்காக வெளிநாட்டுக்கு அனுப்புவதாக கூறி நிதி மோசடியில் ஈடுபடும் நபர்கள் தொடர்பில் அண்மையில் நடைபெற்ற வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் பங்குபற்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வியெழுப்பினர்.

இதற்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் விஜித ஹேரத் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் அங்கீகரிக்கப்பட்ட முகவர் நிறுவனங்கள் மற்றும் கட்டணங்கள் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் பணியகத்தின் இணையதளத்தில் அறிந்துகொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு தரப்பினரும் அங்கீகரிக்கப்பட்ட தொகையை விட அதிகமாகப் பெற்றுக்கொண்டால் அல்லது அனுமதிப் பத்திரம் இன்றி ஏதேனும் செயற்பாடுகளில் ஈடுபட்டால் பணியகத்தில் முறைப்பாடு செய்ய முடியும் என அதிகாரிகளினால் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

ரஷ்யாவில் வசிக்கும் இலங்கையர்கள் அந்நாட்டின் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதாகவும் அவர்கள் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்படுவதாகவும் இந்த கூட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டது.

சுற்றுலா வலயங்களில் இசை நிகழ்ச்சிகள் மற்றும் இரவு விருந்துகளுக்கான ஒலிபெருக்கிகளின் பயன்பாடு இரவு 10 மணியுடன் மட்டுப்படுத்தப்படுவது சுற்றுலாத்துறையின் விருத்திக்குப் பொருத்தமானதாக இருக்காது எனவும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவிற்கு சுட்டிக்காட்டினர்.

பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் இவ்விடயம் குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டும் என அமைச்சர் இதன்போது கூறினார்.

இந்த கூட்டத்தில் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திரா, பிரதியமைச்சர்கள், நாடாபாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# நாட்டில் நடந்த கொடூரங்கள் குறித்து விசாரணைகள் நடத்த வேண்டும்

## தயாசிறி ஜயசேகர கோரிக்கை



யுத்தத்தின் போது கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்கும் ஏனைய இனத்தவர்களுக்கும் நியாயம் கிடைக்கச் செய்யும் வகையில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த காலங்களைப் போன்று மனித உரிமைகள் இடம்பெறாது என உறுதியளிப்பதற்கு மாறாக அதனைச் செயலில் காண்பிக்க வேண்டும்.

மனோரி முத்தெட்டுகம ஆணைக்குழுவினூடாக நாடளாவிய ரீதியில் 22,000 இற்கும் மேற்பட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

ஆம்னெஸ்ட்டி இன்டர்னெஷனல் 60க்கும் மேற்பட்டோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறது. ஈராக்கிற்கு பின்னர் இலங்கையிலேயே அதிகளவானோர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

எனவே இது தொடர்பில் கண்டறிவதற்கு முறையாக விசாரணைகள் அவசியமாகும்.

கொல்லப்பட்ட ஜே.வி.பியினர் தொடர்பில் மாத்திரம் அரசாங்கம் கருத்திற்கொள்ளாது இராணுவத்தினால் கொல்லப்பட்ட தமிழர்கள் குறித்து அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

மஹிந்தவுடன் அரசாங்கத்திலிருந்தபோது படலந்த ஆணைக்குழு தொடர்பில் வாய்திறக்காத ஜே.வி.பி இன்று அது பற்றிப் பேசுகிறது.

அல்ஜசீராவினால் வெளிப்படுத்தப்பட்டதன் பின்னரே அரசாங்கத்துக்கு படலந்த ஆணைக்குழு நினைவுக்கு வந்துள்ளது.

எனவே நாட்டில் நடந்தேறிய இது போன்ற இன்னும் பல கொடூரங்கள் குறித்து அரசாங்கம் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.” என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பகுதியின் அபிவிருத்தியை இந்தியா மூலம் மேற்கொள்ளும் கொழும்பின் திட்டத்தின் ஒர் அங்கமாக இந்திய பிரதமரின் திருகோணமலை விஜயத்தைப் பயன்படுத்த கொழும்பு விரும்புவதாகத் தெரிகின்றது.

ஆயினும், தேசிய மட்டத்தில் நடைபெறப் போகின்ற உள்ளூராட்சித் தேர்தல் பிரச்சாரங்கள் நாட்டில் சூடு பிடிக்கும் கட்டத்தில், அதற்கு இடையில் வெளிநாட்டுத் தலைவர் ஒருவரின் வருகையும், அதையொட்டிய நிகழ்வுகளும், தேர்தல் களத்தில் எத்தகைய மாற்றங்களை ஏற்படுத்தும், அதனைத் தேர்தல் ஆணையம் எவ்வாறு கையாளும் என்ற கேள்விகள் இல்லாமல் இல்லை.

வெளிநாட்டுத் தலைவர் உள்நாட்டில் நம் மக்களுக்கு உதவும் விதத்தில் ஆட்சியில் உள்ள அரசுடன் சேர்ந்து அறிவிக்கக் கூடிய மக்கள் நலன் குறித்த திட்டங்கள், அபிவிருத்தி ஏற்பாடுகள் போன்றவை தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பிற தரப்புகள் குற்றம் சுமத்தும் நிலைமை வந்தால் அதனை தேர்தல் ஆணையம் எவ்வாறு கையாளும், வெளிநாட்டுத் தலைவரின் விஜயத்தை ஒட்டிய விவகாரங்களில் தலையிட்டுக் கட்டுப்பாடு விதிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கு உண்டா, தேவைப்படுமாயின் அதை தேர்தல் ஆணையம் பயன்படுத்துமா என்ற கேள்விகள் எல்லாம் இருக்கின்றன.

இந்தியப் பிரதமரின் விஜயத்தை ஒட்டிய விடயங்கள், நிகழ்ச்சி நிரல்கள் வெளியாகும் போதுதான் அரசியல் கட்சிகள் மற்றும் தரப்புகளிடமிருந்து இது தொடர்பான பிரதிபலிப்புகள் வெளிவரும் என்று எதிர்பார்க்கலாம். அப்போது தேர்தல் ஆணையத்தின் தெறிவினை யாது என்பதை நாம் பார்க்க முடியும்.

இதற்கிடையில் இந்தியப் பிரதமரின் வருகையை இந்தத் தடவையும் இந்து சமயத்துக்கு உச்சப் பயனுள்ளதாகப் பயன்படுத்திவிட வேண்டும் என்பதில் இந்து மதத் தரப்புகள் மிகத் தீவிரமாகவும் ஆவலாகவும் உள்ளன. அகில இலங்கை இந்துமா மன்றத்தின் உப தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் 'திருக்கோணேச்சர திருத்தலத்தைத் தரிசிப்பதோடு ஆலய திருப்பணி வேலைகள் தொடர்பாக இந்திய அரசு அக்கறை எடுக்க வேண்டும் என இந்தியப்பிரதமருக்கு வேண்டுகோள்' என்ற தலைப்பில் இந்தியப் பிரதமர் மோடிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் அதனைப் பிரதிபலித்து நிற்கின்றது.

'இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வர உள்ளார். அவரது விஜயத்தின் போது திருகோணமலை திருக்கோணேச்சர திருக்கோவிலைத் தரிசிக்க வேண்டும். திருக்கோணேச்சர திருப்பணியில் இந்திய மத்திய அரசு அக்கறை கொள்ள வேண்டும்' என ஆறு. திருமுருகன் அக்கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'அந்நியர் ஆட்சிக்காலத்தில் அழிக்கப்பட்ட திருக்கேதீச்சர தலத்தை இந்திய மத்திய அரசாங்கம் கடந்த

காலத்தில் கருங்கல்லால் பாரிய சிற்பக் கோவிலாக மாற்றி அமைத்தது. அதற்கு இலங்கை வாழ் இந்துக்கள் என்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளனர். திருக்கேதீச்சர திருத்தலம் போல் மிகத் தொன்மை வாய்ந்த திருக்கோணேச்சர திருத்தலமும் முக்கியத்துவம் பெறுகிறது.

போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் இப்பெருங்கோவில் முற்றாக அழிக்கப்பட்டது. தற்போது இவ்வாலயம் ஓர் சிறிய நிலப்பரப்பில் பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் மீள்நிர்மாணம் பெற்றுள்ளது. முழுமையான கோவில் கட்டப்படவில்லை. இந்திய அரசு இவ்வாலயத்தை முழுமையாக நிர்மாணித்துக் காப்பாற்ற வேண்டும் என இந்துமக்கள் சார்பில் நன்றியோடு வேண்டுகிறோம்.'

'தங்கள் அமைச்சரவையில் உள்ள கௌரவ அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் திருக்கோணேச்சரத்துக்கு வருகை தந்து ஆலய நிர்வாக சபையுடனும் எம்மோடும் இவ்வாலய எதிர்காலம் பற்றிக் கேட்டறிந்து கொண்டார். இந்திய தூதரகம் தொடர்ந்து திருக்கோணேச்சர திருப்பணி தொடர்பான விவரங்களை ஆராய்ந்துள்ளார்கள். ஆலய நிர்வாகத்தை அழைத்துப் பேசியுள்ளார்கள். தங்கள் இலங்கை பயணத்தில் இத்திருத்தலம் தொடர்பாக உரிய அக்கறை எடுக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.'-என்று கலாநிதி ஆறு.திருமுருகன் உருக்கமான வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளார்.

செய்வாரா மோடி? அதற்கு இடமளிப்பாரா அநுரா?

காலம் விரைவில் பதில் சொல்லும்.

---

## தமிழ்ப் பிரதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கொழும்புதனியார்வானொலிஒன்றின் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டார்.

முஸ்லிம் மக்கள் தமது வாக்குகளைக் கவனமாகச் செலுத்துகின்றனர் என்றும் மனோ கணேசன் எம்.பி. சுட்டிக்காட்டினார்.

தமிழ் மக்களைப் பொருத்தவரையில் அந்தச் சிந்தனை இல்லை என்றும் அவர் கூறினார்.

தமிழ் மக்களுக்கே தமிழ்ப் பிரதிநிதித்துவம் தொடர்பில் அக்கறையில்லாத போது தாம் என்ன செய்வது என்றும் அவர் விசனம் தெரிவித்தார்.

---

## மோடியின் வருகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

எவுள்ளார் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயத்தின் போது பல புதிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவுள்ளன என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

---

## ஹரி ஆனந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் எம்.பியும், தமிழரசுக் கட்சியின் பொருளாளர் கனகசபாபதியும் தொலைபேசியில் தொடர்புகொண்டு வாழ்த்துத் தெரிவித்து கலந்துரையாடினார்கள்.

இந்தத் தகவலை சிறீதரன் எம்.பியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## கனகராயன்குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

மற்றும் பொதுமக்கள் இணைந்து திருட்டில் ஈடுபட்ட இளைஞர் குழுவை மடக்கிப் பிடிக்க முயன்றபோது, அதில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்று அதிகாலை சிக்கியுள்ளார். ஏனையவர்கள் தப்பியோடியுள்ளனர்.

மடக்கிப் பிடிக்கப்பட்ட இளைஞர் மக்களால் நையப்புடைக்கப்பட்டு கனகராயன் குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள கனகராயன் குளம் பொலிஸார், கைது செய்யப்பட்ட இளைஞரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவித்தனர்.

---

## தமிழ்த் தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை தவிர்ந்த அனைத்து சபைகளிலும் வவுனியாவில் தமிழரசுக் கட்சி போட்டியிடுகின்றது. எல்லா சபைகளிலும் நாங்கள் வெற்றி பெறுவோம் என நம்புகின்றோம். எமது மாவட்டம் ஒரு எல்லைப்புற மாவட்டம். எமது மாவட்ட ஆட்சி அதிகாரம் எமது பூர்வீக இந்த மண்ணின் கட்சிகளுக்குக் கிடைக்க வேண்டும். அந்த அடிப்படையில் இந்த மாவட்டத்தில் போட்டியிடுகின்றோம்.

இந்த மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து அபிவிருத்தி நோக்கி நகர்வோம். அர்ப்பணிப்புடன் செயற்படக் கூடிய வேட்பாளர்களைத் தெரிவு செய்துள்ளோம்.

அனைத்து சபைகளிலும் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் சேர்ந்து பயணிக்க வாய்ப்புள்ளது. எமது மத்திய குழுவில் ஒரு சின்னத்தின் கீழ் சேர்ந்து பயணிப்பது முடியாத சந்தர்ப்பத்தில் ஆட்சியமைக்கும்போது தமிழ்த் தேசியக் கட்சிகள் சேர்ந்து ஆட்சி அமைப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது. இந்தத் தேர்தல் முறைமையில் தனிக் கட்சி ஆட்சியமைக்க முடியாது.

சேர்ந்து பயணிக்கும் நிலைப்பாட்டில் இருந்து தமிழரசுக் கட்சி விலகவில்லை. வவுனியா வடக்கில் சேர்ந்து போட்டியிடுவது தொடர்பில் பேசினோம். சில காரணங்களால் அது சரிவரவில்லை. ஆனால், நிச்சயமாகச் சேர்ந்து ஆட்சியமைப்போம்." – என்றார்.

எந்தக் காலத்திலும்.. எந்த வடிவத்திலும்
உங்களோடு நாங்கள்...

செந்தியின்
தமிழன்
வழிகாட்டி
Tamils' Guide
Since 1996
416-615-4646 info@tamilsguide.com
www.tamilsguide.com

# இராணுவம் யுத்தக்குற்றங்களில் ஈடுபட்டது என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது

## நாமல் ராஜபக்ஷ கூறுகின்றார்

"இராணுவத்தில் ஒருசில படையினர் ஏதேனும் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருக்கலாம். இதனை முழு இராணு வத்தினர் மீதும் தொடர்புபடுத்தி இராணுவத்தினர் யுத்தக் குற்றத்திலும், பாலியல் துஷ்பிரயோக செயற்பாடுகளிலும் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டுவதை ஏற்க முடியாது." – இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு, செலவுத்திட்டத்தின் வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சு மீதான விவாதத் தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

"ராஜபக்ஷக்களை ரணில் விக்கிரமசிங்கமே பாதுகாத் தார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் குறிப் பிட்டிருந்தார்.எங்களுக்கு எதிராக ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டார்.

அதிகளவில் வழக்குகளை தாக்கல் செய்தார். நல்லாட்சி அரசாங்கத்தில் ஊழல் ஒழிப்பு அலுவலகத்தின் செயலாளராக பதவி வகித்த ஆனந்த விஜேபால தற்போது பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக செயற்படுகிறார். நீங்களே அந்த வழக்குகளை தாக்கல் செய்தீர்கள். அவற்றில் நாங்கள் நீதி மன்றத்தினால் நாங்கள் விடுதலையாகியுள்ளோம்.

கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்க நாட்டின் இறை யாண்மைக்கு எதிராக செயற்பட்டார். ஆனால் தற்போது சர்வதேச ஊடகங்களில் அவர் நாட்டை காட்டிக் கொடுக் காமை தொடர்பில் மகிழ்ச்சியடைகின்றோம்.

எமது அரசியல் மாற்றங்கள் என்பது வேறு விடயமா கும். நம்மிடையே நட்புறவுகள் உள்ளன. 2005 இல் ஒரே மேடையில் இருந்தோம். 2015 இல் நீங்களும் ரணிலும் ஒரே மேடையில் இருந்தீர்கள். இப்போது பட்டலந்த அறிக் கையை நீங்களே முன்வைக்கின்றீர்கள். அன்று அந்த அறிக்கையை மறைத்து வைத்துக்கொண்டு இருந்தீர்கள்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் 2005இல் உடன்படிக்கை கைச்சாத்திடும் போது குறித்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும் என்று கூற வில்லை. முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்கவின் அமைச்சரவையிலும் இருந்தீர்கள். அப் போதும் பட்டலந்த அறிக்கை தொடர்பில் பேசவில்லை. ஆனால் இப்போது சர்வதேச ஊடகம் கேட்டதும் அந்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளீர் கள்.

நாங்கள் நாட்டை பாதுகாக்க வேண்டும். நாட்டின் முன்னாள் தலைவர் ஒருவர் வெளிநாட்டுக்கு சென்று எமது இராணு வத்தினர் யுத்தக் குற்றத்தில் ஈடுபட்டனர் என்பதனை பகி ரங்கமாக ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு சென்றால் மஹிந்த ராஜபக்ஷவுக்கோ, ரணில் விக்கிரமசிங்கவுக்கோ பாதகமாக அமையாது, முழு நாடும் நெருக்கடிக்குள்ளாக நேரி டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், இராணுவத்தினர் மீது கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றார். இராணுவத்தினர் யுத்தக் குற்றத்தில் ஈடுபட்டனர் என்பது மட்டுமன்றி பாலியல் வன்கொடுமைகளிலும் ஈடுபட்டதாகவும் கூறுகின்றார். ஏதேனும் சம்பமொன்று முன்னாள் இராணுவ சிப்பாயால் நடந்திருக்கலாம்.

ஒரு நபரின் செயற்பாட்டை முழு இராணுவத்தினருடனும் தொடர்புபடுத்த வேண்டாம். பாதாள கும்பல் தொடர்பில் ஏதேனும் பிரச்சினை இருந்தால் அதில் தலையீடு செய்து தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம். அந்த நடவடிக்களை எடுக்கும் போது நாங்கள் உங்களை பாது காக்கின்றோம்.

பாதாள உலக கும்பலை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப் படும் போது பிலிப்பைன்ஸில் நடந்ததை போன்று மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக உங்களை நீதிமன்றத் திற்கு கொண்டு செல்ல நாங்கள் இடமளிக்கப் போவதில்லை. இதனால் இறுதியில் நாடே வீழ்ச்சியடையும்.

இங்கே சாணக்கியன் முன்வைத்த குற்றச்சாட்டுகள் காலத்திற்கு பொருத்தமானது அல்ல. இராணுவத்தினர் அன்று யுத்தம் செய்தனர். அதன்போது ஏதேனும் சம்பவம் இடம்பெற்றிருந்தால் அது தொடர்பில் விசாரணை செய்வ தல்ல பிரச்சினை, இதனை அரசியல் விடயமாக மாற்றி, வருடங்கள் பலவற்றுக்கு பின்னரும் இதுபற்றி கூறிக் கொண்டு போனால் 1988 இல் நடந்த சம்பவத்தை 2028 இலும் கதைப்போம் என்றால், 2009இல் நடந்தவற்றை 2048 இலும் கதைக்க தயாராவோம் என்றால் அதனூடாக இந்த சமூகத்தில் வெறுப்புணர்வு உருவாகுவதை நிறுத்த முடியாது. வெறுப்புணர்வற்ற அரசியலை இங்கே கட்டியெழுப்ப வேண்டுமாயின் அரசு என்ற விடயத்தில் நாம் எல்லோரும் ஒரே நிலைப்பாட்டில் இருக்க வேண்டும்."– என்றார்.

# பளையில் கோர விபத்து! இளைஞர் ஒருவர் சாவு!!

கிளிநொச்சி – பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பளை கரந்தாய் பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் மோட் டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் சம்பவ இடத்தி லேயே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

பளை வடக்கைச் சேர்ந்த 23 வயதுடைய மகேந்திரன் நிசாந்தன் என்னும் இளைஞரே பரிதாபகரமாக உயிரிழந் துள்ளார்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் நள்ளிரவு 11.50 மணி யளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த லொறியும் கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி



வந்த மோட்டார் சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று நேருக்கு நேர் மோதியுள்ளது.

இந்தச் சம்பவத்தின் தொடர்புடைய லொறியின் சாரதி பளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு

தமிழ்நாட்டில் ராமநாதபுரம், தஞ்சாவூர், நாகைப்பட்டினம், காரைக்கால் மாவட்ட மீனவப் பிரதிநிதிகள் புதுடெல்லிக்குச் சென்று இந்திய மத்திய வெளியுறவு துறை அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து இலங்கைக் கடற்பகுதியை ஒட்டி நடைபெறும் விடயங்கள் குறித்து முறைப்பாடு செய்திருக்கிறார்கள் என செய்திகள் வெளியாகியுள்ளன.

பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலையின் தலைமையில் இவர்கள் சென்று இலங்கை விவகாரத்தை ஒட்டி முறைப்பாடு செய்திருக்கிறார்கள் எனக் கூறப்படுகிறது.

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது, படகுகள் பறிமுதல் செய்யப்படுவது போன்றவை அதிகரித்துள்ளன. மீனவர்களுக்கு சிறை தண்டனையும் அதிக அபராதமும் விதிக்கப்படுகின்றன. இது தமிழக மீனவர்கள் இடையே அச்சத்தையும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் 19 படகுகள் இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளன. 145 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். - இப்படி அக்குழுவினர் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரிடம் முறைப்பாடு செய்திருக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும், இலங்கைக் கடற்படை கைப்பற்றப்பட்ட படகுகளையும் கைது செய்யப்பட்ட மீனவர்களையும் நிபந்தனையின்றி விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், படகுகளை இழந்த மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும், இரண்டு நாட்டு மீனவர்கள் பிரதிநிதிகளும் பேச்சு நடத்த ஏற்பாடு செய்து, பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்றெல்லாம் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

இவை தொடர்பில் அவர்களுக்கு வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் உறுதியளித்தார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த விடயத்தில் பேசித் தீர்ப்பதற்கு - இணங்கி முடிவெடுப்பதற்கு - புதிதாக எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இலங்கைக் கடல் எல்லைக்குள் தமிழக மீனவர்கள் அத்து மீறுவது, இழுவைப் படகுகள் மூலம் கடலின் அடி ஆழம் வரை வழித்து அள்ளிச் செல்லும் இழுவை மடி மீன்பிடி முறைமையுடன் இலங்கைக் கடற்பிரதேசப் பக்கம் வருகின்றமை போன்றவை அடியோடு நிறுத்தப்படுவது மட்டுமே இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக இருக்கும் என்பதுதான் யதார்த்த பூர்வமான அணுகுமுறையாகும்.

தங்கள் மீனவர்கள் இந்திய கடல் எல்லையைத் தாண்டி, இலங்கைக் கடற் பகுதிக்குள் வராமல் இருப்பதையும், இழுவை மடி முறைமையை அவர்கள் இலங்கைக் கடற்பிரதேசங்களை நெருங்கி மேற்கொள்ளாமல் தடுப்பதையும் இந்தியத் தரப்பு உறுதி செய்யுமானால் இந்தப் பிரச்சினை தானாகவே தீர்ந்துவிடும்.

இலங்கையின் கடல் எல்லையை எள்ளி நகையாடும் விதத்தில் இந்திய மீனவர்கள் கையாளுகின்றார்கள் என்ற கருத்து நிலைப்பாட்டை அடிக்கடி இத்துணை எண்ணிக்கையில் இந்திய மீனவர்கள் கைதாகின்றமை உறுதிப்படுத்துகின்றது.

இழுவை மடி மீன்பிடி முறைமையைத் தவிர்த்து, ஆழ்கடலில் நீண்ட நாள்கள் தங்கி நின்று தொடர்ந்து மீன்பிடியில் ஈடுபடக்கூடிய வசதிகளைத் தன்னுடைய மீனவர்களுக்கு உறுதிப்படுத்துவதன் மூலமும், தங்களின் கடல் எல்லையைத் தாண்டி இலங்கைக் கடற் பிராந்தியத்துக்குள் இந்திய மீனவர்கள் வகைதொகையின்றி மீறுவதைத் தடுப்பதன் மூலமும் இந்தப் பிரச்சினைக்கு இந்தியாவினால் தீர்வு காண முடியும்.

அதைச் செய்யாமல், இலங்கை மீனவர்களின் கடல் வாழ்வாதாரங்களை சூறையாடும் விதத்தில் இந்திய மீனவர்கள் அத்துமீறுவதற்கு இடம் அளிப்பது இப் பிரச்சினையை மேலும் தீவிரமடையவே வைக்கும்.

இதனை, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க உறுதியாளித்திருக்கும் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் கருத்தில் கொள்ள வேண்டும்.









# நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் வேலைத்திட்டத்தை ‘‘கிளீன் ஸ்ரீலங்கா’’ திட்டத்தின் கீழ் முன்னெடுக்க தீர்மானம்

உலக நுகர்வோர் உரிமை தினத்தை முன்னிட்டு நுகர்வோர் உரிமைகளை பாதுகாப்பதற்காக, சமூகத்திற்குள் அணுகுமுறைகளை மேம்படுத்தும் வேலைத்திட்டமொன்றை “கிளீன் ஸ்ரீலங்கா”வின் கீழ் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் சுகாதார மற்றும் விவசாய அமைச்சுகளின் அதிகாரிகளுடனான கலந்துரையாடல் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, பிரஜைகளுக்கு தரமான மற்றும் பாதுகாப்பான உணவு வேளையை வழங்குவதற்காக சுகாதார அமைச்சிடம் உள்ள கொள்கை மற்றும் திட்டங்களை செயற்படுத்த வேண்டுமென ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்தார்.

தரமான மற்றும் சுகாதார பாதுகாப்புடன் கூடிய உணவு வேளையை பெற்றுக்கொள்வதற்கு நுகர்வோர் கொண்டிருக்கும் உரிமை தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், சுகாதார தரங்களுக்கு அமைவாக உணவுகளை பெற்றுக்கொள்வதற்கான சூழலை உருவாக்குதல், நுகர்வோர் நம்பிக்கையை பலப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள், அது தொடர்பாக அரச மற்றும் தனியார் துறை ஒத்துழைப்புக்களை பலப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

உணவு தரப்படுத்தல் மற்றும் தரமாக்கலுக்காக நாட்டில் காணப்படும் கொள்கை மற்றும் திட்டங்களை “கிளீன் ஸ்ரீலங்கா” வேலைத்திட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கும், உணவகங்களுக்கு சான்றிதழ் அளித்தல், வீதியோர வியாபாரிகளை வரையறுத்தல், வீதியோர உணவகங்கள் மற்றும் வண்டிகளை பதிவு செய்தல், நபர்களின் பயிற்சி பதிவு தொடர்பில் தற்போது காணப்படும் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

















# ஜனாதிபதி அநுராவின் பங்கேற்புடன் சிறப்பு நடைபெற்ற இப்தார் நிகழ்ச்சி

முஸ்லிம்களின் புனித ரமழான் நோன்பு மாதத்தையொட்டி நடைபெற்ற இப்தார் நிகழ்ச்சி , ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவின் பங்கேற்புடன் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியானது அலரி மாளிகையில் நடைபெற்றது.

இஸ்லாமிய மதத் தலைவர்களும் ஏராளமான முஸ்லிம்களும் இதில் கலந்து கொண்டதுடன், மேலும் இஸ்லாமிய சமய நிகழ்வுகளுக்கு முன்னுரிமை அளித்து இந்த நிகழ்வு நடைபெற்றது.

சிறப்பு பிரார்த்தனைக்குப் பிறகு, மாலை 6.23 மணிக்கு நோன்பு துறக்கப்பட்டது.











# மன்னாரின் எதிர்காலம்...?



- வி.எஸ்.சிவகரன் -

மன்னார் மாவட்டம் வறட்சியான பிரதேசம் எனப் பொதுவான அபிப்பிராயம் இருந்தாலும் இலங்கையின் உணவு உற்பத்திக்கு கணிசமான பங்களிப்பை அது வழங்கி வருகிறது.

அதேபோல் கடல் உணவு ஏற்றுமதியிலும் அதிகளவான பங்களிப்பை நல்கிறது.நிலவளமும் நீர் வளமும் கனிம வளமும் இயல்பான இயற்கை சூழமைவும் வரலாற்று தொன்மை அடையாளங்களையும் அது கொண்டதாகும். இதன் பாரம்பரியமும் தொன்மையுடன் பல நூற்றாண்டு வரலாற்று வாழ்விடத்தையும் படிமங்களையும் தன்னகத்தே கொண்டது.

இந்தியாவுக்கு அண்மையில் உள்ள தீவுப் பகுதி என்பதனால், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிராந்திய நலன் சார் பாதுகாப்பு விவகாரங்களிலும் கவனத்துக்குரிய இடமாக மாறி இருக்கிறது. சமநிலை போட்டியாளர்கள் மத்தியில் கழுகு பார்வைக்கு உட்படுத்துகின்ற இடமாக உள்ளமையும் மன்னாரின் வளச்சுரண்டலுக்கு முக்கிய காரணமாக உள்ளது.

வடக்கிலே ஏனைய மாவட்டங்களோடு ஒப்பீடு செய்கின்ற போது ஆறுகள் இங்குதான் அதிகமாக காணப்படுகின்றன.

அதேபோல் பல்வேறு விதமான கனிமப் படிமங்களும் உள்ளன. இவற்றைச் சுரண்டுவதற்காக பன்னாட்டு கம்பனிகள் போட்டா போட்டி போட்டு முயல்கின்றன. ஒரு பக்கம் கனிம வள அகழ்வுக்கான முயற்சி. அடுத்து காற்றாலை மின் உற்பத்திக்கான பிரதான தளமாக மன்னார்த்தீவை மாத்திரமன்றி மாவட்டம் முழுவதையும் உபயோகிக்க பல் தேசிய கம்பனிகளும் உள்ளூர் கம்பனிகளும் ஏட்டிக்கு போட்டியாக முனைப்புக் காட்டுகின்றன.

மத ரீதியான ஆதிக்கம் இருக்கின்ற போதும் கூட அரசியல் ரீதியான முக்கியத்துவம் இந்த மாவட்டத்திற்கு பெரிய அளவில் கிடைப்பதில்லை. வலிமையான அரசியல்வாதிகள் இங்கு இல்லை. இந்த மக்களினுடைய உணர்வுகளை உள்வாங்கி, இயற்கையினுடைய இருப்பைச் சீர்கெடுக்க முனைவோர்களுக்கு எதிராக வெகுண்டெழக்கூடிய அளவில் அரசியல் தலைமைத்துவம் வெற்றிடமாகவே காணப்படுகின்றது. உரிமை சார் இருபில் முன்னாள் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகைக்கு பின்னர் இந்த மாவட்டத்தின் தலைமைத்துவம் என்பது தொடர் வெற்றிடமாகவே நீள்கிறது. மூன்று தசாப்தங்களாக நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பவரால் கூட மன்னாரில் குறிப்பிடத்தக்க எந்த செயல்பாட்டையும் முன்னெடுக்க முடியவில்லை.

மத ரீதியான வாக்களிப்பு சிந்தனை மன்னார் மக்களினுடைய மனங்களில் இருந்து மாறாத வரைக்கும் அரசியல் தலைமைத்துவம் என்பது இப்படி வெற்றிடமாகவே காணப்படும். இலங்கையில் எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு மதவாதக் கெடுபிடிகளும் அடக்குமுறைகளும் மன்னாரில் வேரூன்றி விருட்சமாக நிழல் கொடுக்கின்றன.

அதனால் நோக்கு நிலை இருப்பின் சமத்துவ சமூக நீதிக் கோட்பாட்டை நிறுவுவதில் பல்வேறு விதமான சவால்கள் காணப்படுகின்றன. பகுத்தறிவுச் சிந்தனை மேலோங்காத வரைக்கும் உணர்வு பூர்வ இருப்பியல் கடந்த வாழ்வியல் பொதுமைப்பாட்டை இலக்கு நோக்கி நகர்த்தி எட்டுவது என்பது இலகுவான விடயம் அல்ல.

இவ்விதமான பலம், பலவீனங்களை அபகரித்து பன்னாட்டு கம்பனிகளும் பயன்படுத்திக் கொள்ளவே முனைகின்றன.

மன்னர் தீவுப் பகுதியிலே தழ்வுபாடு தொடக்கம் நடுக்குடா வரை ஏலவே 30 காற்றாலைகள் அமைக்கப்பட்டு மின்னுற்பத்தி நடைபெறுகின்றது.

நறுவிலிக்குளத்தில் ஆறு காற்றாலைகள் தனியார் நிறுவனத்தால் அமைக்கப்பட்டு இயங்குகின்றன. சிலாபத்துறையில் இருந்து முள்ளிக் குளம் வரை 30 காற்றாலை அமைக்கும் பணிகள் நடைபெறுகின்றன.

வெள்ளிமலைப் பகுதியில் ஏழு காற்றாலை அமைப்பதற்

தொடர்ச்சி▼





# மன்னாரின் எதிர்காலம்...?

தொடர்ச்சி▲

குரிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

சௌத் பாரில் இருந்து தாழ்வுபாடு வரை நான்கு காற்றாலைகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. புதுக்கமம் பகுதியிலும் புதிதாக அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாந்தை மேற்கு பகுதியிலும் 150இக்கும் மேற்பட்ட காற்றாலைகள் அமைப்பதற்குரிய ஆய்வுகள் இடம்பெறுகின்றன. இதற்கு அப்பால் அதானி நிறுவனத்தின் உயர் வலுவுடைய 50 காற்றாலை அமைப்பதற்குரிய அடிப்படை வேலைகள் நடைபெற்றாலும் கூட, புதிய அரசாங்கம் அதனுடைய நடைமுறை நிர்வாக ரீதியான குறைபாடுகள் காரணமாக புதிய குழு அமைத்தது. ஆதனால் அந்த நிறுவனம் வெளியேறுவதாக அறிவித்தது. பின்னர் மீண்டும் தாங்கள் அந்த முயற்சியில் இருந்து முழுமையாக வெளியேறிவிடவில்லை என இன்னும் ஓர் அறிக்கை தெரிவித்துள்ளது.

ஆனால் இந்திய பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்தில் இலங்கை வருகின்ற போது அதானியினுடைய திட்டங்கள் நடைமுறைப்படுத்தக் கூடிய ஏது நிலை உருவாகும்.

இந்தியாவோடு முரண்பட்டு இலங்கை அரசாங்கம் செயல்படுவதற்கான வாய்ப்பு இல்லை. ஆகவே அதானியினுடைய திட்டம் மீண்டும் நடைமுறைக்கு வரக்கூடிய வாய்ப்பு அதிகமாகவே காணப்படுகின்றது.

இதற்கு அப்பால் கனிமங்கள் அகழ்வினாக் மிக மோசமான சுற்றுச்சூழலை பாதிக்கக்கூடிய புறநிலை காரணங்கள் அதிகமாக காணப்படுகின்றன.

ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்ட டைட்டானியம் ஷான் மினரல் கம்பெனி டைட்டானியம் உட்பட பல்வேறு விதமான தாதுப் பொருள்களை அகழ்வு செய்வதற்காக பல முனைப்பு காட்டி வருகிறது. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பெறுவதற்காக மூன்று முறை 20 க்கும் மேற்பட்ட அரசுத் திணைக்களங்கள் களவிஜயத்தை மேற்கொண்டும் மக்களினுடைய எதிர்ப்பு போராட்டத்தால் மீளவும் திருப்பி அனுப்பப்பட்டன.

இந்தியாவைத் தளமாகக் கொண்ட மாஸ் மெனரல் கம்பெனி கரையோர மணல் அகழ்வுக்கான வேலையில் முனைப்பு காட்டி வருகிறது. அவர்களும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பெறுவதற்கு அதற்குரிய பரிசோதனைகளை பெற்றுக் கொள்வதற்கும் பல வழிகளிலும் முயன்று வருகின்றனர். நடுக் குடாவில் இருந்து சிலாபத்துறை வரைக்கும் கடற்கரை ஓரத்தில் இருக்கின்ற கறுப்பு படிம மண்ணை அகழ்வதற்குரிய முயற்சியில் அவர்கள் ஈடுபடுகின்றனர்.

இவர்கள் ஓய்வு பெற்ற படை அதிகாரிகளையும் பணியாளர்களாக இணைத்துக் கொண்டு ஏகாதிபத்திய நோக்கில் அணுக முயல்கின்றனர். இவ்விடத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட வாடிகளும் எழுபதிற்கு மேற்பட்ட கரைவலைப்பாடுகளும் உண்டு. இதனால் மீன்பிடித்துறை முழுமையாக பாதிக்கப்படும்.

இந்த மூன்று திட்டங்களுக்காகவும் மாவட்டச் செயலகத்தில் பல கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. துறை சார்ந்த அதிகாரிகள் எனக் கூறப்படுபவர்கள் இந்த திட்டங்களுக்கு ஆதரவாகப் பல தொழில்நுட்ப ரீதியான விளக்கங்களை கூற முனைகின்றனர். படித்தவர்கள் எனக் கூறப்படுபவர்களால் இந்த ஏமாற்று கருத்தியல் விதைப்பு சாமானிய மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

சகல கூட்டங்களிலும் இந்த மூன்று திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதிக்க முடியாது என சிவில் அமைப்புகளாலும் பொதுமக்களாலும் வலியுறுத்தப்பட்டது. ஆனாலும் அவர்கள் அதிலிருந்து விலகுவதாக இல்லை. இந்த மூன்று திட்டங்களுக்கு உரிய காணிகளை அங்கு இருக்கின்ற காணி மோசடிக் கும்பல் மூலம் உறுதிகள் தயாரிக்கப்பட்டு (உரிமையாளர்கள் உள்ள போதிலும் கூட) அடாத்தாக நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. இந்த கம்பனிகள் பல கோடி பணத்தைச் செலுத்தி அந்த காணிகளையும் பெற்றுள்ளன. இதற்கு சில அரச ஊழியர்களும் அரசு அதிகாரிகளும் சட்டத்தரணிகளும் அரசியல்வாதிகளும் உடந்தையாக இருக்கிறார்கள். இந்த கம்பனிகள் பலருக்கும் சலுகை செய்யவும் தயங்கவில்லை.

மன்னார் தீவு பகுதி என்பது தரைத் தோற்றத்தை விட தாழ்வான பகுதி என்பதனால் தாங்கு திறன் வலு சக்தி குறைந்த ஒன்றாகவே புவியியலாளர்களால் கோடி காட்டப்படுகின்றது. அதனால்தான் தீவுப்பகுதியில் மூன்று மாடிகளுக்கு மேல் கட்டடங்கள் அமைப்பதற்கு இதுவரை அனுமதி வழங்குவதில்லை. இயற்கை அனர்த்தம் ஏற்படுமாக இருப்பின் மன்னார் தீவு காணாமல் போய்விடும். சாதாரணமான மழையை கூட தாங்கும் திறன் கொண்டதாக அமைவிடம் இல்லை. நீர் வழிந்து ஓடக்கூடிய இடங்கள் ஒழுங்கு முறையாகக் கட்டமைக்கப்படவில்லை. கடந்த பருவமழையின் போது மிக மோசமான நெருக்கடியை மன்னார் தீவு சந்தித்தது. மழை ஓய்ந்து ஒரு மாதத்திற்கு பின்னர் கூட பல

தொடர்ச்சி▼





# மன்னாரின் எதிர்காலம்...?

தொடர்ச்சி▲

இடங்களிலே நீர் வடிந்து ஓட முடியாத நிலை காணப்பட்டது. இதனால் சிறு குறு உற்பத்திகள் விவசாயம் – அதிலும் குறிப்பாக முருங்கை தோட்டங்கள் – முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது. பொதுமக்கள் குடியிருப்பதற்கு போதுமான நிலம் இல்லாத சூழ்நிலையில் இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுமாக இருப்பின் மன்னார்தீவில் எதிர்காலத்தில் குடியமர்வதற்கு நிலம் இல்லாத துர்ப்பாக்கிய நிலை ஏற்படும்.

மன்னார் தீவுக்கு வழியிலே ஒரு துண்டு நிலம் கூட இல்லாத அளவுக்கு வனத்தினைக்களத்தாலும், வனவளத்திணைக்களத்தாலும் உரிமை கோரி வர்த்தமானிறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஆகவே மன்னார் மக்கள் எதிர்காலத்தில் எங்கு குடியிருப்பது? இயற்கைச் சூழலில் இயல்பாக மனிதன் வசிக்க முடியாத ஒரு நிலையில், அந்த மனிதர்களின் விருப்பின்றி அபிவிருத்தி என்பது அவசியமா என்கின்ற கேள்வி எழுகிறது.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது இன்றைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அதானி நிறுவனத்தினுடையது உட்பட எந்தத் திட்டத்தையும் மன்னாரில் நடைமுறைப்படுத்த விட மாட்டோம் என வாக்குறுதி வழங்கினார். அவர்களுடைய முகவர்களும் கூட இங்குள்ள சிவில் அமைப்புகளோடு கலந்துரையாடல் நடத்தி உறுதி வழங்கினார்கள். ஆனால் இப்பொழுது வாய்ச்சொல் வீரர்களாகவே தேர்தல் வாக்குறுதிகளை எல்லாம் காற்றில் பறக்க விட்டு விட்டனர்.

அரசியல் தலைமைத்துவம் இல்லாத மன்னர் மக்கள் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதில் திண்டாடுகிறார்கள்.

இந்த கம்னிகள் சாமானிய மக்களை இலக்கு வைத்து தமது நலன்களையும் சலுகைகளையும் ஏற்படுத்துவதன் மூலம் உரிமை சார் இருப்புப் போராட்டத்தை மழுங்கடித்து, தமது கோப்ரேட் சிந்தனையை நிலை நிறுத்துவதற்கு முனைகிறார்கள். இதனால் மன்னாரின் எதிர்காலம் மனிதர்கள் வசிக்க முடியாத தீவாகவே காணப்படப் போகிறது.

பல வகையான வெளிநாட்டு பறவைகள் மன்னாருக்கு வருவதுண்டு. இந்தத் திட்டங்கள் யாவும் நடைமுறைப்படுத்தப்படுமாக இருப்பின் அதில் எந்த பறவையும் வரக்கூடிய சூழல் காணப்படாது.

அது, இந்த ஆண்டிலேயே எதிரொலிக்கத் தொடங்கி விட்டது. இந்த ஆண்டு வெளிநாட்டு பறவைகளுடைய வருகை மிகவும் குறைந்து விட்டது.

மன்னார் மக்கள் விழித்துக் கொள்ளாத வரை பன்னாட்டு கம்பனிகள் மன்னாரை – மக்களை – குத்தகைக்காரர்களாக மாற்றி விடுவார்களோ என்கின்ற அச்சம் எழுகிறது.

மின் உற்பத்தித் திட்டங்களாலும் கனிம அகழ்வுத் திட்டங்களாலும் மன்னார் மாவட்டம் பாலைவனமாகக் கூடிய சூழல் ஏற்படப்போகிறது. கனிம வளத்தை பொறுத்தவரை ஏழு ஆறுகளிலும் ஏனைய கிளைகளிலும் இருந்து ஒவ்வொரு மாதமும் ஆயிரக்கணக்கான கீயூப் மணல் அகழப்பட்டு வெளி மாவட்டங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. இதில் அதிகம் சட்டவிரோதமான மணல் அகழ்வு அதிகாரிகள் துணையோடு நடைபெறுகிறது. சட்டம் – ஒழுங்கு என்பது வெறும் பேச்சளவில்தான்.

மன்னாரின் எதிர்காலத்தைக் காப்பாற்றுவதற்கு இயற்கை ஆர்வலர்களும் சமூக நலன் விரும்பிகளும் முன்வர வேண்டிய கடப்பாடுண்டு.பொறுப்புணர்வு உண்டு. இல்லையேல் இந்த மாவட்டம் பன்னாட்டு கம்பனிகளால் முழுமையாகக் காவு கொள்ளப்படக்கூடிய அபாய நிலை காணப்படுகிறது. அதன் தாக்கமாக நீண்ட கால அடிப்படையில் குடிபெயர வேண்டிய நிர்ப்பந்த நிலை தோற்றம் பெறும். ஆகவே மன்னார் மக்களே விழித்துக் கொள்ளுங்கள்!





# வவுனியா அக்போதி மகா வித்தியாலத்துக்கு வடக்கு ஆளுநர் வேதநாயகன் திடீர் பயணம்

வவுனியா தெற்கு கல்வி வலயத்திலுள்ள அக்போதி மகா வித்தியாலத்துக்கு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கடந்த புதன்கிழமை திடீர் பயணம் மேற்கொண்டார்.

பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர்களுடன் ஆளுநர் கலந்துரையாடினார். பாடசாலையின் தேவைப்பாடுகள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

பாடசாலையில் 2015ஆம் ஆண்டு இந்திய அரசின் நிதி உதவியில் கட்டுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட கட்டடம் இன்னமும் நிறைவுறுத்தப்படவில்லை என்று பாடசாலைச் சமூகத்தால் ஆளுநருக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன் காரணமாக வேறு அபிவிருத்தி உதவிகளும் கிடைக்கவில்லை என்றும் ஆளுநருக்கு அவர்கள் தெரியப்படுத்தினர்.

இது தொடர்பில் உரிய தரப்புக்களுடன் கலந்துரையாடுவதாக ஆளுநர் இதன்போது பதிலளித்தார்.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் க.பிரட்லி ஜெனட், வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் இணைந்திருந்தனர்.





# உள்ளூராட்சி தேர்தலில் செல்வாக்கை நிரூபிப்பவருக்கே மு.கா. தேசியப்பட்டியல் வெற்றிடத்துக்கு முன்னுரிமை!

## செயலாளர் நிஸாம் காரியப்பர் எம்.பி. தெரிவிப்பு

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியானது குறைந்தபட்சம் ஐந்து பிரதேசங்களுக்கு தலா ஒரு வருடம் என்ற அடிப்படையில் சுழற்சி முறையில் வழங்கப்படும். அத்துடன் இந்த உள்ளூராட்சி தேர்தலில் செல்வாக்கை நிரூபிப்பவருக்கே அதில் முன்னுரிமை வழங்கப்படும் என்று அக்கட்சியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம். நிஸாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.நளீம் தன்னுடைய பதவியை ராஜினாமா செய்த விவகாரம் முஸ்லிம் காங்கிரஸ் சரித்திரத்தில் மாத்திரமல்ல, இலங்கை அரசியல் சரித்திரத்திலும் ஒரு தாக்கத்தை உருவாக்கியிருக்கிறது.



இது கட்சிக்கும் மக்களுக்கும் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற விடயத்தில் முன்னுதாரணமாக அமைந்திருப்பது மாத்திரமல்ல, முஸ்லிம் காங்கிரஸ் சரித்திரத்தில் கட்சியின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு தனக்கு வழங்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை 04 மாதங்களுக்குள் ராஜினாமாச் செய்த முதல் சந்தர்ப்பமுமாகும்.

இதனால் இக்கட்சியின் செயலாளர் என்ற வகையில் நான் மிகவும் பெருமிதம் அடைந்துள்ளேன். கட்சி சார்பாக அவருக்கு நன்றிகளை தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் இந்த நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடியும் வரை நிரப்பப்பட மாட்டாது. அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தங்களுக்கு அல்லது தங்களது பிரதேசத்துக்கு வழங்கப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள் இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தங்களுடைய செல்வாக்கை கட்சிக்கு நிரூபித்துக் காட்ட வேண்டும்.

அதாவது இதனை எதிர்பார்க்கும் கட்சி உறுப்பினர்கள் அந்தந்தப் பிரதேசத்தில் போட்டியிட்டு, வெற்றி பெற்று, அதிகாரத்தை நிலைநாட்டி, தங்களுக்கும் தங்களுடைய பிரதேசத்திற்கும் இப்பதவி வழங்கப்படுவதற்கு நியாயபூர்வமான உரித்து உள்ளது என்பதை நிரூபிக்க வேண்டும். – என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

# யாழ்ப்பாணம் சிங்கள வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை சிறார்களுக்கு உதவிப் பொருள் வழங்கல்









**(பிரபாகரன் டிலக்சன்)**

யாழ்ப்பாணம் சிங்கள வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை சிறார்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் உலர் உணவுப் பொருள்கள் நேற்றைய தினம் வழங்கி வைக்கப்பட்டன.

நேற்று காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் நாக விகாரையில் வைத்து யாழ்ப்பாணம் சிங்கள வர்த்தக சங்கத்தினரால் 100 பாடசாலை சிறுவர்களுக்கான தலா சுமார் 8,000 ரூபா பெறுமதியுடைய கற்றல் உபகரணங்கள் மற்றும் உலர் உணவுப் பொருள்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் இங்கிராங்கொட பௌத்த பீட தலைவரும் வடமத்திய மாகாண பிரதான மலைத்தலைவருமான ஸ்ரீ கெத்த ஸ்ரீ சீவிலி, நாகவிகார விகாராதிபதியும் சிங்கள வர்த்தக சங்கத்தின் ஆலோசகருமான ஸ்ரீ விமல தேரர், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், 512 ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் நிசாந்த முத்துமால, 513 ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் றுவான் கருணாரட்ன, யாழ் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க மற்றும் பொலிஸ், இராணுவ அதிகாரிகள், சிங்கள வர்தகசங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



# வவுனியா மாணவனின் இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரத்தை பார்வையிட்ட தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர்

(கி.வசந்தன்)

இலங்கையில் முதன்முறையாக இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரத்தினூடாக வாக்களிப்பு மேற்கொண்டு வவுனியா மாணவன் சாதனை படைத்துள்ள நிலையில், தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் எஸ்.அச்சுதன் அதனைப் பார்வையிட்டார்.



வவுனியா விபுலானந்தா கல்லூரிக்கு நேற்று வருகை தந்த தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் தலைமையிலான குழுவினர் அந்த மாணவனின் கண்டு பிடிப்பைப் பார்வையிட்டனர்.

வவுனியா விபுலானந்தா கல்லூரி மாணவன் கபிலாஸினால் அண்மையில் புத்தாக்க போட்டிக்காகக் கண்டுபிடிக்கப்பட்ட இலத்திரனியல் முறையிலான வாக்களிப்பு இயந்திரம் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றது. பின்னர் அந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி பாடசாலையில் மாணவர் நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்புச் செயற்பாடு இடம்பெற்றிருந்தது.

மாணவனினால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரம் இலங்கையின் ஒரு தேர்தலுக்கு பயன்படுத்தப்பட்டிருந்தமை இதுவே முதல் தடவையாகும்.

இலங்கை தேர்தல் முறையில் கடதாசி பாவனை இல்லாது இலத்திரனியல் வாக்களிப்பு முறையை அறிமுகப்படுத்த வேண்டும் என்கின்ற நோக்கோடு இந்த மாணவனினால் கண்டுபிடிக்கப்பட்ட இந்த பொறிமுறை முதன் முறையாக மாணவர் நாடாளுமன்றத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில், இந்த இலத்திரனியல் வாக்களிப்பு இயந்திரம் தொடர்பாக அறிந்து கொண்ட தேர்தல் ஆணைக்குழுவினர் அதனைப் பாடசாலைக்குச் சென்று பார்வையிட்டமையுடன், அதன் செயன்முறை தொடர்பாகவும் அறிந்து கொண்டு மாணவனுக்குத் தமது பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

அத்துடன், அதனை மேலும் விருத்தி செய்வது தொடர்பாகவும் ஆலோசனைகளை வழங்கினர். எதிர்காலத்தில் இதனை மேலும் விருத்தி செய்து தேர்தல் நடவடிக்கைகள், தேர்தல் பயிற்சிகளில் பயன்படுத்துவது குறித்தும் தமது ஆணைக்குழுவுடன் பேசி ஆலோசிப்பர் எனவும் தெரிவித்திருந்தனர்.

இதன்போது, வவுனியா உதவி தேர்தல் ஆணையாளர் அமல்ராஜ், பாடசாலை பிரதி அதிபர்களான திருமதி சுரேந்திரன், எஸ்.தர்சன், பாடசாலை ஆசிரியர்கள், உயர்தர மாணவர்கள், மாணவனின் பெற்றோர், பழைய மாணவர் சங்கத்தினர் ஆகியோரும் வருகை தந்திருந்தனர்.





# காரைக்கால் அம்மையார், திருவள்ளுவர் குருபூசைகள் நேற்று திருகோணமலை சிவன் கோவில் மண்டபத்தில்

(எஸ்.கீதபொன்கலன்)

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டலுடன் திருகோணமலை மாவட்ட செயலகம், திருகோணமலை மாவட்ட அறநெறிகள் சங்கம் இணைந்து நடத்திய காரைக்கால் அம்மையார் மற்றும் திருவள்ளுவர் குருபூசை நிகழ்வு நேற்று சனிக்கிழமை காலை திருகோணமலை விஸ்வநாத சுவாமி (சிவன்) ஆலய அன்னதான மண்டபத்தில் இடம் பெற்றது.

இரெட்ணசிங்க பிள்ளையார் ஆலயத்தில் இருந்து காரைக்கால் அம்மையார் மற்றும் திருவள்ளுவரின் திருவுருவப் படங்களை தாங்கியவாறு ஆரம்பமான ஆன்மீக பேரணியானது ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம், முத்துக்குமாரசுவாமி ஆலயம் ஊடாக நடைபவனியாக விஸ்வநாத சுவாமி (சிவன்) ஆலயத்தை வந்தடைந்தது. அங்கு ஏனைய கலை நிகழ்வுகள் உள்ளிட்ட பல்வேறு சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.






# பனை சார்ந்த ஆராய்ச்சிகளில் மாணவரை ஈடுபடுத்த ‘கற்பகச் செல்வம்’ திட்டம் தயார்

## பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் சகாதேவன் தகவல்

(த.சுபேசன்)

பாடசாலை மாணவர்களுக்கான “கற்பகச் செல்வம்“ என்ற திட்டம் பனை அபிவிருத்திச் சபையினால் ஆரம்பித்து வைக்கப்பட்டிருப்பதாக சபையின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

பாடசாலை மாணவர்கள் பனை சார்ந்த ஆராய்ச்சிகளில் ஈடுபடும் செயற்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது பாடசாலை மாணவர்களுக்கு பனை சார்ந்த மற்றும் அதன் உற்பத்திகள் சார்ந்த ஆராய்ச்சி விளக்கம் மற்றும் செயன்முறை ஆகிய பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இந்த திட்டத்தின் ஆரம்ப நிகழ்வாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உயிரியல் பிரிவு மாணவர்கள் கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்திற்கு வருகைதந்து பனை சார்ந்த புத்தாக்க சிந்தனைகளை வளர்த்துக் கொண்டுள்ளனர்.

மாணவர்கள் பனை சார்ந்த ஆராய்ச்சிகளில் ஆர்வமாக இருக்கின்றமை மகிழ்ச்சியளிக்கின்றது.

இளைய தலைமுறை இவ்வாறான விடயங்களில் ஆர்வம் காட்டுவதன் ஊடாக எமது வளத்தைப் பேணிப்



பாதுகாத்து, அதன் மூலம் சிறந்த வருமானத்தைப் பெறுவதுடன் அதனை அடுத்த சந்ததியினருக்கும் கடத்த முடியும். – என்றார்.




# மன்னாரில் திருடப்பட்ட ரூ. 28 லட்சம் பெறுமதியான நகைகள் மீட்கப்பட்டன

## பொலிஸாரினால் மூவர் கைது



(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம் பகுதியில் கடந்த சிவராத்திரி தினத்தன்று இரவு திருடப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மன்னார் பொலிஸாரால் நேற்றைய தினம் சனிக்கிழமை மீட்கப்பட்டன. அந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு:-

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாந்திபுரம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த சிவராத்திரி தினத்தன்று பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் திருடப்பட்டிருந்தன.

பாதிக்கப்பட்டவர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையில் திருட்டு சம்பவம் தொடர்பாகமன்னார்பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரி ஜயதிலக்கவின் பணிப்புரைக்கு அமைவாக குற்ற விசாரணை பிரிவு பொறுப்பதிகாரி மகேஷ் தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட தேடுதல் மற்றும் விசாரணைகளின் போது மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து சுமார் 28 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் மீட்கப்பட்டன. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மன்னார் சாந்திபுரம் மற்றும் பனங்கட்டுகொட்டு பகுதியை சேர்ந்த 28,29,33 வயதுடையவர்கள் எனத் தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்ட மூவரும் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட மூவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

# சக மாணவிக்கு "ஐ லவ் யூ" சொன்ன மாணவனை பிரம்பால் தண்டித்த அதிபர் பொலிஸாரின் விசாரணைக்கு அழைப்பு

(கனகராசா சரவணன்)

பாடசாலை ஒன்றில் தரம் 10 ஆண்டில் கல்விகற்கும் மாணவி ஒருவருக்கு "ஐ லவ் யூ" எனக் குறிப்பிட்டு காதலிப்பதாக தெரிவித்த அதே வகுப்பில் கல்வி கற்கும் சக மாணவனை அதிபர் பிரம்பால் கண்டித்தமையை அடுத்து மாணவன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அதிபருக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒரு பாடசாலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளதாக அந்த பிரதேச பொலிஸ் நிலையப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதுபற்றி தெரியவருவதாவது:-

ஆண், பெண் பிள்ளைகள் கற்றுவரும் இக்கலவன் பாடசாலையில் நேற்று முன்தினம் தரம் 10 ம் ஆண்டில் கல்விகற்றுவரும் மாணவி ஒருவரை பார்த்து அதே வகுப்பில் கல்விகற்றுவரும் மாணவன் "ஐ லவ் யூ" எனத் தெரிவித்துத் தனது காதலை வெளிப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து மாணவி பாடசாலை அதிபரிடம் சென்று அது குறித்து முறைப்பாடு செய்திருக்கின்றார். அதிபர் சம்பந்தப்பட்ட மாணவனை தனது காரியாலயத்துக்கு வரவழைத்து பிரம்பால் மாணவன் மீது இரண்டு அடி கொடுத்து ஒழுக்கமாக நடக்குமாறு தெரிவித்து எச்சரித்து அனுப்பியுள்ளார்.

இதனை தொடர்ந்து வீட்டிற்கு சென்ற மாணவன் அதிபர் தனக்கு அடித்துள்ளார் எனத் தெரிவித்ததையடுத்து மாணவனை பெற்றோர் மட்டு போதனா வைத்தியசாலையில் சேர்த்தமையுடன் அதிபருக்கு எதிராகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

இதனைத் தொடர்ந்து அதிபரை விசாரணைக்குத் தாங்கள் அழைத்துள்ளனர் எனப் பொலிசார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை சிறுவர், பெண்கள் பிரிவு பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.



# மீனவர் பிரச்சினை தொடர்பாக அமைச்சர் சந்திரசேகரன்
# கச்சத்தீவில் தமிழக மீனவர்களைச் சந்தித்து கலந்தாய்வு

“கச்சத்தீவு திருவிழா இனிதே நிறைவுபெற்றுள்ளது. வெற்றிகரமாக ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றிகள். கடந்த முறை இந்திய பக்தர்கள் பங்கேற்கவில்லை. இம்முறை பங்கேற்றிருந்தனர். கச்சத்தீவு திருவிழாவை எதிர்காலத்தில் மேலும் சிறப்பாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.” – என கடற்றொழில் மற்றும் நீரியல் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

இலங்கை – இந்திய மீனவ பிரச்சினை தொடர்பாக அமைச்சர் கச்சத்தீவில் தமிழக மீனவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இராமேஸ்வரத்தின் அனைத்து மீனவ கூட்டமைப்பின் தலைவர் ஜேசுராஜ் மற்றும் சங்க உறுப்பினர்கள் இந்தக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அமைச்சர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

இலங்கை, தமிழ் நாட்டு மீனவர் பிரச்சினையென்பது நீண்டகாலமாக நிலவும் பிரச்சினை.

இதற்கான தீர்வு தொடர்பில் நீண்டகாலமாக கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

இந்திய மீனவர்களைக் கைது செய்ய வேண்டும், சிறையில் அடைக்க வேண்டும் என நாம் நினைக்கவில்லை. அதற்கான தேவைப்பாடும் எமக்கு கிடையாது. எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைவதாலும், தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைமையை கடைபிடிப்பதாலுமே கைது செய்யப்படுகின்றனர்.

இந்திய மீனவர்கள் இழுவை படகை பயன்படுத்தி அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு கடல்வளத்தை அழித்தால் இந்து சமுத்திரமே பாலவனம் ஆகக்கூடும்.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு மீனவர்கள் இன்னும் மீண்டெழவில்லை. இந்நிலையில் தமிழக மீனவர்கள் அவர்களின் வளங்களை அழிக்க முற்படுவது ஏற்புடையது அல்ல.” – என்றார்.







# கச்சத்தீவு திருவிழா இனிதே பூர்த்தி



வரலாற்றுச் சிறப்புமிக்க கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருவிழா நேற்றைய தினம் நிறைவுபெற்றது.

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று முன்தினம் பிற்பகல் ஆரம்பமானது.

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த திருவிழாவில் சிவகங்கை மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை லூர்து ஆனந்த் ஆண்டகை, யாழ். மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார் ஆகியோர் தலைமையில் நேற்றுக் காலை எழு மணிக்கு திருவிழா சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் வருகைதந்திருந்த மக்கள் இதில் பங்கேற்றிருந்தனர். இதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கப்பட்டது.

கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், இலங்கைக் கடற்படைத் தளபதி காஞ்சன பானகொட, யாழிற்கான இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி, யாழ்ப்பாண மாவட்ட பதில் செயலாளர் மருதலிங்கம் பிரதீபன், நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, வடக்கு மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், அரச உயர் அதிகாரிகள், நீதிபதிகள், கடற்படை அதிகாரிகள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் என பலரும் இதன்போது கலந்துகொண்டனர்.

இறுதியில் கச்சதீவு பெருவிழாவின் நினைவாக ஆலய சூழலில் மரக்கன்றுகளும் நாட்டப்பட்டது.
















# அரசு நிதியுதவி பெறும் கல்லூரிகளின் ஆசிரியர்கள் வீதி மறியல் போராட்டம்

## மதுரையில் 400 பேர் கைது

மதுரை ஆரப்பாளையத்தில் நேற்று அரசு நிதி உதவி பெறும் கல்லூரி ஆசிரியர் சங்கங்கள் சார்பில் 4 ஆண்டுகளாக சம்பளம் வழங்காததை கண்டித்து வீதி மறியலில் ஈடுபட்டுள்ளனர். இதில் பெண் பேராசிரியர்கள் உட்பட 400 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

பல்கலைக்கழக மானியக்குழு, 7 ஆவது ஊதியக்குழு பரிந்துரையின்படி தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் பணி மேம்பாட்டுக்கான அரசாணை 2021 இல் வெளியிடப்பட்டது. அரசுக் கல்லூரிகளின் ஆசிரியர்களுக்கு பணி மேம்பாடு ஊதியம் நிலுவையுடன் வழங்கப்பட்டது. ஆனால் அரசு உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு இணைப்பேராசிரியர் உள்ளிட்ட பணிமேம்பாட்டிற்கான ஆணை மட்டும் வழங்கி சம்பளம் வழங்கவில்லை.

இந்நிலையில், 4 ஆண்டுகளாக சம்பளம் வழங்காததை கண்டித்தும், காலதாமதமின்றி பணி மேம்பாட்டு சம்பளம் வழங்கக்கோரியும் நேற்று அரசு நிதி உதவி பெறும் கல்லூரி ஆசிரியர்களின் ஏ.யு.டி. மற்றும் மூட்டா சங்கங்கள் சார்பில் ஆரப்பாளையம் குரு தியேட்டர் எதிரில் வீதி மறியலில் ஈடுபட்டனர்.

இதற்கு ஏ.யு.டி. தலைவர் காந்தி ராஜன், மூட்டா தலைவர் செந்தாமரைக்கண்ணன் ஆகியோர் கூட்டுத் தலைமை வகித்தனர். ஆசிரியர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி ஏ.யு.டி. பொதுச் செயலாளர் கிருஷ்ணராஜ், மூட்டா பொதுச் செயலாளர் நாகராஜன் ஆகியோர் பேசினர். மறியல் போராட்டத்தை சி.ஐ.டி.யு. மாவட்டச் செயலாளர் லெனின் துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில துணைத்தலைவர் நீதிராஜன், எல்.ஐ.சி. ஊழியர் சங்க செயலாளர் ஜி.மீனாட்சி சுந்தரம், டான்சாக் மாநில செயற்குழு உறுப்பினர் ரமேஷ், மூட்டா முன்னாள் தலைவர் பெ.விஜயகுமார், அரசு கல்லூரி ஆசிரியர் கழக மண்டலச் செயலாளர் கிறிஸ்டல் ஜீவா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஏ.யு.டி. பொருளாளர் சேவியர் நன்றி கூறினார். வீதி மறியலில் பெண் பேராசிரியர்கள் உட்பட 400 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

# இந்தியாவுக்கு பல மொழிகள் தேவை: தமிழகத்தை சாடினார் பவன் கல்யாண்

மொழிக் கொள்கை மற்றும் வடக்கு – தெற்கு மாநிலங்களுக்கு இடையே நிலவும் அரசியல் சார்ந்த சிக்கலுக்கு மத்தியில் இந்தியாவுக்கு பல மொழிகள் தேவை என ஆந்திர மாநில துணை முதல்வர் பவன் கல்யாண் கூறியுள்ளார்.

காக்கிநாடா மாவட்டம் பிதாபுரம் தொகுதியில் நடைபெற்ற ஜன சேனா கட்சியின் 12 ஆவது ஆண்டு விழாவில் தனது ஆதரவாளர்களுக்கு மத்தியில் அக்கட்சியின் தலைவரான பவன் கல்யாண் பேசி இருந்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,



“இந்தியாவுக்கு பல மொழிகள் தேவை. அது தேசத்துக்கு சிறப்பு சேர்க்கும். இது தமிழகத்துக்கும் பொருந்தும். இந்தி மொழியை எதிர்க்கும் தமிழகம், தமிழ் திரைப்படங்களை பிற மொழிகளில் “டப்பிங்” செய்யக்கூடாது. ஆனால், நிதி ஆதாயத்துக்காக தமிழ் படங்கள் பல மொழிகளில் “டப்” செய்யப்படுகிறது.

சனாதன தர்மம் எனது ரத்தத்தில் கலந்துள்ளது. அதை யாருக்கும் நிரூபிக்க வேண்டிய அவசியம் எனக்கு இல்லை. எல்லோருக்கும் மத சுதந்திரம் என்பது உண்டு. நான் இந்து மத பாதுகாவலர்.

மத சுதந்திரம் சார்ந்த விஷயத்தில் ஜன சேனா வாக்கு வங்கி அரசியல் செய்யவில்லை. எந்த மதத்தின் மீது தாக்குதல் நடந்தாலும் அதை கண்டிக்க வேண்டும். தவறு எங்கு நடந்தாலும் அது தவறு தான். தேசத்தை வடக்கு, தெற்கு என பிரிக்கும் துணிவு யாரிடத்திலும் இல்லை. அது மாதிரியான முயற்சிகள் நடந்தால் நிச்சயம் என்னை போன்றவர்கள் அதை தடுக்க முன்வருவோம். நான் சமூக மாற்றத்துக்காக அரசியலுக்கு வந்துள்ளேன்.

பல சவால்களை கடந்து ஜன சேனா இந்த நிலையை எட்டியுள்ளது. 2019 இல் நாம் தோல்வியை தழுவிய போது நம்மை கேலி செய்தனர். நம்மை சட்டப்பேரவையின் வாசலை கூட நெருங்க விட மாட்டோம் என சவால் செய்தனர். இன்று 21 எம்.எல்.ஏ மற்றும் 2 எம்.பிக்களை நாம் கொண்டுள்ளோம். நமக்கு பயம் கிடையாது.” என பவன் கல்யாண் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவின் அச்சுறுத்தல்களுக்கு பிரான்ஸ் ஒரு போதும் அடிபணியாது

## அமைச்சர் லாரன்ட் செயிண்ட் மார்ட்டின் தெரிவிப்பு

அமெரிக்காவின் அச்சுறுத்தல் களுக்கு பிரான்ஸ் ஒரு போதும் அடி பணியாது என பிரான்ஸ் வர்த்தக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தை பிரான்ஸ் வர்த் தக அமைச்சரான லாரன்ட் செயிண்ட் மார்ட்டின் தெரிவித்துள்ளார்.


இந்தநிலையில், பிரான்சும் மற் றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற அதன் கூட்டாளர்களும், அமெரிக்காவின் வரி விதிப்பு அச்சுறுத்தல்களுக்கு அடி பணியமாட்டோம் என அவர் குறிப்பிட் டுள்ளார்.



அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தான் துவக்க முடிவு செய்த வர்த்தகப்போரை அதிகரிப்பதற் கான முயற்சிகளைத் துவக்குகிறார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், பிரான்ஸ் மற்றும் ஐரோப் பிய ஒன்றியம் மற்றும் எங்கள் கூட்டாளர் களுடன் இணைந்து பதில் நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளதில் உறுதி யாக உள்ளது என அவர் தெரிவித்துள் ளார்.

# கனமழையால் செந்நிறமாக மாறிய ஹோர்மோஸ் தீவு





ஈரானின் ஹோர்மோஸ் தீவில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கனமழை காரணமாக கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வெள்ளப்பெருக்கில் பாய்ந் தோடும் நீர் செந்நிறமாக மாறியுள்ள தாகவும் ,இதனால் அப்பகுதியில் கட லும் செந்நிறமாக மாறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஹோர்மோஸ் தீவில் காணப்படும் மண்ணில் அதிக இரும்பு ஆக்சைட் இருப்பதால் இவ்வாறு வெள்ளநீர் செந்நிறமாக மாறியுள்ளதாக விஞ்ஞானி கள் கூறுகின்றனர்.

எவ்வாறாயினும், செந்நிறமாக பாய்ந்தோடும் வெள்ளத்தை பார்வையிடு வதற்கு அதிகமானவர்கள் வருகை அப்பகுதிக்கு தருவதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# அடுத்த ஆண்டு செவ்வாய் கிரகத்திற்கு பயணிக்கும் ஸ்டார்ஷிப் விண்கலம்

SpaceX's Starship விண்கலம் அடுத்த ஆண்டு இறுதியில் செவ்வாய் கிரகத்திற்கு பயணிக்கும் என எலான் மஸ்க் தெரிவித்தார்.

2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி நிறுவப்பட்ட SpaceX நிறுவனம், அதன் 23 ஆ வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது.

இந்நிலையில் செவ்வாய் கிரகத் திற்கு விண்கலத்தை அனுப்ப தீவிரம் காட்டி வருகிறது.

கடந்த மார்ச் மாதம் 7ஆம் திகதி ஸ்டார்ஷிப் விண்கலம் விண்ணில் ஏவப்பட்ட சில நிமிடங்களில் வெடித்து சிதறியது.

இந்நிலையில் SpaceX இன் ஸ்டார்ஷிப் என்ற விண்கலம் அடுத்த ஆண்டு இறுதியில் செவ்வாய் கிர கத்திற்கு பயணிக்கும் என எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்



செவ்வாய் கிரகத்திற்கு அனுப்ப வுள்ள ஸ்டார்ஷிப்பில் மனித ரோபோ வும் சேர்த்து அனுப்பப்படவுள்ளதாக வும், 2029 ஆம் ஆண்டில் செவ்வாய் கிரகத்தில் மனிதர்கள் தரையிறங்க லாம் எனவும் இது 2031 ஆம் ஆண்டிற் குள் கட்டாயமாக நடைபெறும் எனவும் எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

கடந்த 2013 ஆம் ஆண்டு இந்தியா 'மங்கள்யான்' என்ற விண்கலத்தை செவ்வாய் கிரகத்திற்கு அனுப்பியது.

முதல் முயற்சியிலேயே செவ்வாய் கிரகத்திற்குசெயற்கைக்கோள் அனுப்பிய முதல்நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 16.03.2025

## மேஷம்

இன்று நன்மை தீமை இரண்டும் கலந்து காணப்படும்.உரையாடலின் போது கவன மாக இருங்கள்.பயணங்கள்செய்ய வாய்ப்புள்ளது.

பணியிடத்தில் சிறப்பான பலன்களைக் காணலாம்.உங்களின் சிறிய முயற்சிகள் பெரும் வெற்றியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் சில பயனுள்ள விஷயங்களைப் பேசுவீர்கள். என்றாலும் பேச்சு ஆக்கபூர்வமாக இருக்கும் வகையிலும் உறவின் நல்லிணக்கத்தை பராமரிக்கும் வகையிலும் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்று கணிசமான தொகை உங்களிடம் காணப்படும். உங்கள் குடும்பத்தோடு பயணம் செல்ல நேரலாம். அதற்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள்.

## ரிஷபம்

இன்ற உங்கள்ஆற்றலையும் வலிமையையும் உணரும் நாள்.இன்று உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

கடினமான பணிகளைக் கூட இன்று நீங்கள் எளிதாகச் செய்வீர்கள். நீங்கள் பணிகளை திறம்பட கையாண்டு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள்.

இன்று இருவரும் மனம் பொருந்தி ஒற்றுமையுடன் கானாப்படுவீர்கள். உங்கள் காதலின் எதிர்காலத்தை பற்றி கலந்தாலோசிப்பீர்கள்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. நீங்கள் எதிர்பாராத வகையிலிருந்து பணம் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும். தியானம் அல்லது யோகா மேற்கொள்வது உங்களுக்கு நல்லது.

## மிதுனம்

பிரச்சினை அல்லது மனக் குழப்பம் காரணமாக இன்றைய நாளை அனுபவிக்கும் மனநிலை உங்களிடம் இருக்காது. நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் பணிகளை திறம்பட மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காத காரணத்தினால் நீங்கள் ஏமாற்றமடைவீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதன் மூலம் நல்லுறவை வளர்ப்பீர்கள்.

இன்று கணிசமான தொகை சம்பாதித்தாலும் தவிர்க்கமுடியாத செலவுகள் காரணமாக நீங்கள் பணத்தை தக்க வைத்துக்கொள்ள இயலாது.

பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது.

## கடகம்

உங்கள் மனதிலிருந்து எதிர்மறை எண்ணங்களை நீக்காவிடில் உங்கள் வளர்ச்சிபாதிக்கும்.மதிப்புமிக்கபொருளை இழக்க வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உங்களுக்கு அசௌகரியமான உணர்வு காணப்படும். இதை அவருக்கு தெளிவாக உரைப்பது சிறந்தது.

இன்று சில நிதி கட்டுப்பாடுகள் காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை காண நீங்கள் உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

## சிம்மம்

இன்று தடைகளையும் கஷ்டங்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும். நீங்கள் முயற்சி எடுத்தால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக வெற்றியை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்களின் அகந்தைப் போக்கு காரணம்மாக உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையின் உணர்வுகளை கருத்தில் கொண்டு மதிப்பது நல்லது.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. கவனம் தேவை.

தேவையற்ற எண்ணங்கள் காரணமாக குழப்பம் மட்டுமன்றி தலைவலியும் ஏற்படும்.

## கன்னி

உங்கள் செயல்களை மேற்கொள்வதில் தடைகள் காணப்படும் ஒரு முடிவை செயலாக்குவதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும். தகவல் பரிமாற்றத்தில் குறைபாடு காணப்படும்.

சக பணியாளர்களுடன் சூடான விவாதங்கள் அல்லது அகந்தை உணர்வுகள் தலை தூக்கும். அத்தகைய சூழ்நிலையை நீங்கள் உருவாக்காமல் இருப்பது சிறந்தது.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

நிதி நிலைமை சாதகமாக இருக்காது. தேவையற்ற செலவுகளால் கவலை ஏற்படும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கண்களில் கவனம் செலுத்துவது சிறந்தது.

## துலாம்

இன்று இழப்புகள் ஏற்படாத வகையில் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். பொறுமையாக இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்களின் சில பணிகள் முடிக்கப்படாமல் இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் திறமையோடு முடிப்பதற்கு திட்டமிடல் அவசியம்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்டு சிறிது வன்மையாக நடந்து கொள்வீர்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்க்க வேண்டும்.

அதிக பொறுப்புகள் காரணமாக அதிக செலவுகள் காணப்படும். தேவையற்ற செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

வயிறு உப்பசம் காரணமாக அவதிப்பட நேரலாம்.

## விருச்சிகம்

இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி கிடைக்கும் நாள். உங்களின் நேர்மையான முயற்சி மூலம் உங்களிடம் மறைந்திருக்கும் திறமைகளை நீங்கள் உணரும் நாள். இன்று முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

உங்கள் செயல் திறனில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் தொடர்ந்து கடின முயற்சி செய்து உங்கள் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு குறைந்து காணப்படும். இதனால் உறவில் திருப்தியான நிலை இருக்காது.

இன்று பணபுழக்கம் அதிகமாக காணப்படும். இந்தப் பணத்தை ஆடம்பரப் பொருள்கள் வாங்கப் பயன்படுத்தலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 16.03.2025




இன்று முன்னேற்றகரமான பலன்கள் இருக்காது. உங்கள் மனக் குழப்பமும் வளர்ச்சியில் தடையை ஏற்படுத்தும். இது உங்களுக்கு பாதகமாக இருக்கும்.

பணியிடத்தில் திருப்திகரமான பலன்கள் காணப்படாது. அதிக வேலை காரணமாக உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை மேற் கொள்ளும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

உங்கள் துணையுடன் வாக்குவாதத்தில் ஈடுபட நேர லாம். எனவே இன்று மகிழ்ச்சியுடன் இருக்க நட்பான உறவை பகிர்ந்து கொள்வது நல்லது.

இன்று பணபுழக்கம் குறைவாக காணப்படும். உங்கள் பொறுப்புகள் அதிகமாக இருக்கும். பணப்பற்றாக்குறை காரணமாக உங்கள் உடனடி தேவைகளை பூர்த்தி செய்ய இயலாது.




இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடு படும் சூழல் ஏற்படும். இதனால் உங்க ளுக்கு ஆறுதல் கிடைக்கும். சமூக கூட்டங்களில் கலந்து கொள்வீர்கள். புதிய நண்பர்களை உருவாக்கிக் கொள்வீர்கள்.

வெற்றிகரமான பலன்களைக் காண கடினமாக உழைக்க வேண்டும். சில பணிகள் முடிக்க முடியாமல் நிலுவையில் வைக்க வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்பட்ட உணர்வு களை வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க அத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று கூடுதல் செலவினங்கள் காணப்படும். கடன் வாங்க நேரலாம்.

மன உளைச்சல் காரணமாக தோள் வலி ஏற்படலாம்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். நம்பிக்கை நிறைந்து காணப்படும் நாள். கடின உழைப்புக்கு வெற்றி கிடைக்கும் நாள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் நல்ல பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் திருப்தியான சூழல் காணப்படும். கடினமான உழைப்பின் மூலம் நற் பெயரும் அதன் மூலம் நன்மதிப்பும் பெறுவீர்கள்.

உங்கள் குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். உங்கள் துணை யுடன் நல்ல புரிந்துணர்வை பராமரிப்பீர்கள்.

இன்று நிதிநிலையில் அதிர்ஷ்டம் காணப்படும். உங்கள் பணத் தேவைகளை பூர்த்தி செய்து கொள் வீர்கள். அதிர்ஷ்டம் காரணமாக நிதிநிலையில் முன்னேற்றம் காணப்படும்.




இன்று எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்வதன் மூலம் இன்றைய நாள் சிறப்பாக இருக்கும். புதிய மனி தர்களின் தொடர்பும் அதனால் நல்ல பயனும் கிடைக்கும். இதனால் உங்கள் தொடர்பு வட்டம் விரிவடையும். வாழ்க்கை உங்களுக்கு கவர்ச்சிகரமாக இருக்கும்.

கூடுதல் பணிகள் காரணமாக இன்று நீங்கள் பணியில் மும்மரமாக இருப்பீர்கள். பணிகள் அதிகமாக இருக்கும். அவைகளை திறமையாக கையாள வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடும் விவா தங்களும் காணப்படும். இரவரும் நட்பு முறையோடு பழகுவீர்கள்.

நிதியைப் பொறுத்தவரை இன்று சுமாரான நாள். பண வரவிற்கும் சேமிப்பிற்கும் அதிர்ஷ்டம் குறைவான நாள்.






# பிள்ளையான், வியாழேந்திரன் தலைமையில் ‘கிழக்கு தமிழர் கூட்டமைப்பு’ நேற்று உதயம்

## புரிந்துணர்வு ஒப்பந்தம் மட்டக்களப்பில் கைச்சாத்து

**(கனகராசா சரவணன்)**

‘கிழக்கு தமிழர் கூட்டமைப்பு’ எனும் புதிய கூட்டமைப்பை முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி மற்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்கு தமிழர் கழகம் ஆகியன இணைந்து உருவாக்கி யுள்ளன. இந்த இரு தரப்பினருக்கும் இடையிலான உத்தியோகபூர்வ புரிந் துணர்வு கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் மட்டக்களப்பு ரிவேரா விடுதியில் இடம் பெற்றுள்ளது.

கிழக்குத் தமிழர்களின் வளர்ச்சியை யும் சுபீட்சத்தையும் கருத்தில் கொண்டு பல்லின சிக்கல்களுக்கு முகம் கொடுக் கும் வண்ணம் பலமிக்க அரசியல் சக்தி ஒன்றினை கட்டமைக்கும் முயற்சியில் ‘கிழக்கு தமிழர் கூட்டமைப்பு’ எனும் புதிய கூட்டமைப்பு நேற்று உதயமானது.

இந்த ஒற்றுமைக்கான பயணத்தில் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்த லில் கிழக்கை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் அரசியல் சக்திகள் அனை வரையும் ஒன்றிணைத்து போட்டியிட உள்ளமையோடு எதிர்காலத்தில் பல்வேறு தமிழ் அரசியல் கட்சிகளை யும் சிவில் சமூக ஆர்வலர்களையும் ஒன்றிணைத்து அதனூடாக கிழக்குத் தமிழர்களின் அரசியல், சமூக பாது காப்பு அரணாக பலம்பொருந்திய கட்ட மைப்பாக இது செயல்படவுள்ளது என சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் தெரி வித்தனர்.